**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண்.388/2012

நாள்: 21.07.2025.

பெயர்: மலர்கொடி (பி.வா.சா.2) க/பெ: சாமிதுரை

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை...**

1) எனது குடும்ப சொத்துக்கள் அனைத்தும் எனது மாமியார் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது கணவரும், அவரது சகோதரி தவமணியம்மாளுக்கும் இடையே குடும்ப சொத்துக்களைப் பொறுத்து பாகம் பிரிக்கப்பட்டதா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது, அவரவர் இடத்தை அவரவர் தனித்தனியாக அனுபவித்து வந்தனர். நிலக்கரி திட்டத்திற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்துக்களுள் எனது கணவர் சொத்தும், தவமணியம்மாள் சொத்தும் ஆர்ஜிதம் செய்யப்பட்டதா என்றால் இருவர் சொத்தும் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. மேற்படி ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்துக்கள் தவிர்த்து எனது கணவருக்கு பாத்தியப்பட்ட சுமார் 2 ஏக்கர் நிலத்தை அவர் விற்றுவிட்டார் என்றால் சரிதான்.

2) ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்துக்கள், எனது கணவர் விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கள் போக தற்போது எவ்வளவு சொத்து உள்ளது என்றால் 2 ஏக்கர் உள்ளது. நிலக்கரி திட்டத்தில் ஆர்ஜிதம் செய்யப்பட்டது போக தவமணியம்மாளுக்கு சுமார் 54 செண்ட் மட்டுமே பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி 54 செண்டை பொறுத்து தான் தற்போது வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கு சொத்துக்களை வாதிகள் தான் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கும், வாதிகள் குடும்பத்திற்கும் சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு பணத் தகராறு இருந்தது என்றால் சரிதான். நான், 1ம் பிரதிவாதி முருகேசனிடம் கிரையத் தொகையை முழுவதையும் பெற்றுக்கொண்டேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியிடமிருந்து மேற்படி கிரையத் தொகை பாக்கியை பெற்றுக்கொண்டேனா என்றால் இல்லை.

3) எனது கணவர் 1ம் பிரதிவாதி முருகேசனுக்கு கிரையம் கொடுத்தற்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதிக்கும், 1ம் வாதியான மாசிலாமணிக்கும் தாவா சொத்துப் பொறுத்து தகராறு ஏற்பட்டு காவல் நிலையம் வரை சென்றனர் என்றால் சரிதான்.

மேற்படி காவல் நிலைய விசாரணையில் தாவா சொத்தினை 1ம் வாதி அனுபவிக்க கூடாது என்று அறிவுறுத்தப்பட்டதா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது, காவல் நிலைய விசாரணைக்கு 1ம் வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் எனது கணவர் 2ம் பிரதிவாதி ஆகியோர்கள் தான் காவல் நிலையம் சென்றனர். எனது நாத்தனாரான 1ம் வாதியின் மனைவி தாவா சொத்தை தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

4) தாவா சொத்தை கிரையம் பெற்ற 1ம் பிரதிவாதியிடமிருந்து தாவா சொத்தை மீண்டும் எனது கணவருக்கே கொடுக்கச் சொல்லி அவர் உயிருடன் இருந்த காலத்தில் 1ம் பிரதிவாதியிடம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. எனது நாத்தனார் தவமணி பாகத்தை எனது மகள் திருமணத்திற்கு விற்பனை செய்ய சொல்லி மாசிலாமணி சொல்லிவிட்டு, பிறகு 1ம் பிரதிவாதி முருகேசன் கிரையம் பெற்றப் பின்பு அவர் ஏர் ஓட்டப் போகும் போது தடுத்து பிரச்சினை செய்தார். தற்போது தாவா சொத்து தரிசாக தான் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றதன் அடிப்படையில் தாவா சொத்துக்கு 1ம் வாதி வரக்கூடாது என்று தடுத்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் வாதியோ, அவரது குடும்பத்தினரோ தாவா சொத்தை விற்பனை செய்துக்கொள்ள எங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது கணவருக்கு தாவா சொத்தை கிரையம் கொடுக்க எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றாலும், எனது கணவர் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தன் பேரில் அவருக்கு அனுபவம் கைமாறவில்லை என்றாலும், அந்த கிரையம் செல்லாது என்றாலும், தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/-திரு. ம.சி. கண்ணதாசன், எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.